**<u>2019 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30.01.2019 ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்புக் கூட்ட பொருள்</u>**

---

**1)** திண்டுக்கல் மாநகராட்சி— மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய வேலைவாய்ப்பு அலுவலகம், அருகில் உள்ள வார்டு எண்.6, பிளாக் எண். 2, நகரளவு எண். 1018, மங்களபுரம் தெருவில் சுமார் 161 ச.மீ அளவில் அரசு புறம்போக்கு குள சாலையோர ஆக்கிரமிப்பு நிலம் தொடர்பாக, ஆக்கிரமிப்புத்தாரர் திருமதி. சந்திரா என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P. எண். 244/2019 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி, வழக்கில் மாநகராட்சி சார்பாக திரு. லாரன்ஸ் அவர்களை வழக்காட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு ஆஜராக வழக்கு கட்டணம் ரூ.7,500/— பட்டுவாடா செய்ய வழக்கறிஞர் தனது 08.01.2019 —ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 438/2019/எப்1)**

**<u>அலுவலக குறிப்பு—</u>**

மாநகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு. லாரன்ஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ. 7,500/— பொது நிதியில் இருந்து பட்டுவாடா செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**2)** திண்டுக்கல் மாநகராட்சி— மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சிலுவத்தூர்சாலை, பீக்குளம், வார்டு எண்.6, பிளாக் எண். 44, நகரளவு எண். 1769/1, சுமார் 19 ச.மீ அளவில் ஆக்கிரமிப்பு நீர்நிலை புறம் போக்கு நிலம் தொடர்பாக திருமதி. செல்வி, க/பெ. நாகராஜன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P. எண். 324/2019 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி, வழக்கில் மாநகராட்சி சார்பாக திரு. லாரன்ஸ் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களை வழக்காட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு ஆஜராக வழக்கு கட்டணம் ரூ.7,500/— பட்டுவாடா செய்ய வழக்கறிஞர் தனது 08.01.2019 —ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது. **(ந.க.எண். 435/2019/எப்1)**

**<u>அலுவலக குறிப்பு—</u>**

மாநகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு. லாரன்ஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ. 7,500/— பொது நிதியில் இருந்து பட்டுவாட செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**3)** திண்டுக்கல் மாநகராட்சிக்கு எதிராக திரு. ராமக்கண்ணன் என்பவர் மாநகராட்சி ஆணையரை 1–ம் பிரதிவாதியாக சேர்த்து வார்டு எண். 6, பழைய நகரளவு எண். 1626/2, 1626/1ஏ புதிய நகரளவு எண். 194க்கு சம்மந்தப்பட்ட நிலத்தில் 408 ச.அடி காலிமனையினை மாநகராட்சி பெயருக்கு நிலஅளவை ஆவணங்களில் மாற்றம் செய்யப்பட்டது. ஆட்சேபித்து திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண். ஓ.எஸ்.எண் 01/2019 –ல் இம்மாநகராட்சி சார்பாக திரு. சுப. ஜெகநாதன், மாமன்ற வழக்கறிஞர் ஆஜராகிடவும், மேற்படி வழக்கிற்கான உத்தேச வழக்குக்கட்டணம் **ரூ. 10,000/–** வழங்கிடவும், மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும். **(ந.க.எண். 288/2019/எப்2)**

<u>**அலுவலக குறிப்பு–**</u>

1. அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து ரூ. 10000/– வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

---

4) திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ரவுண்ட் ரோடு வார்டு எண்.6, பிளாக் எண். 43, நகரளவு எண். 1681/4–ல் சர்க்கார் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டதை ரயத்து புஞ்சை என வகைப்பாடு செய்யப்பட்டு திரு. ராமசாமி செட்டியார் மகன் திரு. ஆர்.எம். கருப்பையா செட்டியார் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதை ரத்து செய்து மாநகராட்சியின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து திரு. சுப்பிமணியன் என்பவர் W.P. எண். 1210/2019 வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி, வழக்கில் மாநகராட்சி சார்பாக திரு. லாரன்ஸ் அவர்களை வழக்காட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு ஆஜராக வழக்கு கட்டணம் ரூ.7,500/– பட்டுவாடா செய்ய வழக்கறிஞர் தனது 23.01.2019 –ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 10291/2018/எப்2)**

<u>**அலுவலக குறிப்பு–**</u>

மாநகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு. லாரன்ஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ. 7,500/– பொது நிதியில் இருந்து பட்டுவாட செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

5) திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குப்பட்ட வார்டு எண் 2 ல் அமைந்துள்ள அரசு மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவு முன்புறம் மாநகராட்சிக்கு கட்டுப்பட்ட சாலை இடத்தில் ஆவின் பாலகம் 10‘ X 8‘ ல் அமைக்க டிடி 160 திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால்

உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மேலாளர் அவர்கள் கடந்த 13.12.2018 ம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார். மேற்படி கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 16049/2018/எப்3)**

**<u>அலுவலக குறிப்பு–</u>**

திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குப்பட்ட வார்டு எண் 2 ல் அமைந்துள்ள அரசு மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவு முன்புறம் மாநகராட்சிக்கு கட்டுப்பட்ட சாலை இடத்தில் ஆவின் பாலகம் 10‘ X 8‘ ல் அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைக்களுக்குட்பட்டு மாமன்றம் அனுமதிக்கலாம்.

1. அரசாணை எண் 460, வருவாய் துறை நாள். 04.06.1998ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தரைவாடகையினை நிலத்தின் வழிகாட்டி மதிப்பீட்டின் அடிப்படையில் கீழ்கண்டவாறு மாத வாடகை ரூ.3740/– என்ற விகிதத்தில் வாடகை நிர்ணயம் செய்யலாம்.
2. ஒப்படைக்கும் நாள் முதல் ஒராண்டு காலத்திற்கு நில வாடகைக்கு அனுமதி வழஙகி ஒப்புதல் அளிக்கலாம்.
3. அரசு மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவு முன்புறம் மாநகராட்சிக்கு கட்டுப்பட்ட சாலையோர இடத்தில் 10‘ X 8‘ அளவில் மட்டுமே ஆவின் பாலகம் அமைக்கப்படவேண்டும்.
4. ஆவின் பாலகம் அமைக்கப்படும் பொழுது போக்குவரத்திற்கோ பொது மக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு 10‘ X 8‘ அளவில் மட்டுமே அமைத்துக் கொள்ள வேண்டும்.
5. மேற்படி ஆவின் பாலகத்தில் பால் மூலம் தயார் செய்யப்படும் ஆவின் பாலக பொருட்கள் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். இதர பொருட்கள் விற்பனை செய்தால் ஆவின் நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும். மேலும் உள் வாடகைக்கு விடக்கூடாது.
6. மேற்படி இடம் மாநகராட்சிக்கு தேவைப்படும் பொழுது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் ஆவின் பாலக பெட்டியினை அப்புறப்படுத்தி கொள்ள வேண்டும்.
7. எந்த ஒரு காரணத்திற்காகவும் நீதி மன்றத்தில் வழக்கு தொடரக் கூடாது.
8. மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் அமைக்க ஒரு ஆண்டிற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. ஆவின் பாலகம் தொடர்ந்து நடத்த விரும்பினால் உரிமம் முடிவுறும் மூன்று மாதத்திற்கு முன்பே விண்ணப்பம் அளித்து மீண்டும் உரிமம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
9. ஆவின் பாலக கடைக்கு நில வாடகையாக மாதம் ஒன்றுக்கு ரூ. 3740/– (ரூபாய் மூவாயிரத்தி எழுநூற்றி நாற்பது மட்டும்) செலுத்தப்பட வேண்டும் ஒரு வருடத்திற்கான வாடகை ரூ. 12 X 3740 /– = ரூ. 44,880/– மற்றும் காப்புத் தொகை ரூ. 10,000/– (Security deposite) முன் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும்.
10. தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகிக்ககூடாது மீறி தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உபயோகத்தால் உத்திரவு ரத்து செய்யப்படும்.

---

**6)** திண்டுக்கல் மாநகராட்சி பேருந்து நிலையத்தில் திருநஙகைகளுக்கு குயின் சிட்டி ரோட்டரி சஙகத்தின் சார்பாக கழிப்பறை கட்டி தருவதாகவும் இடம் தேர்வு செய்து தரக்கோரியுள்ளார்கள். காமராஜர் பேருந்து நிலையத்தில் மதுரை காரைக்குடி மார்க்கத்தில் கிழக்கு புற கட்டணக்கழிப்பறைக்கு அருகில் Wash Institute – னரால் அமைக்கப்பட்டுள்ள

பெண்களுக்கான பிரத்யேக கழிவறைக்கு அருகில் உள்ள காலியிடத்தில் திருநஙகைகளுக்கு கழிப்பிடம் விண்ணப்பத்தாரர் மூலம் அமைக்கலாம் என இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவின் குறிப்பின்படி, மேற்கண்ட தேர்வு செய்யப்பட்ட இடத்தில் திருநஙகைகளுக்கான கழிப்பறை அமைப்பதில் தேவையான தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதிகளுடன் விண்ணப்பத்தாரர்கள் மூலம் கழிப்பறை அமைப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.16043/2016/எப்1)**

<u>**அலுவலக குறிப்பு—**</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**7)** திண்டுக்கல் மாநகராட்சியில் காய்கறி கழிவுகளிலிருந்து மின்சாரம் தயார் செய்யும் பணியினை திண்டிமாவனம், தொண்டு நிறுவனத்தினர் காந்தி கிராம பல்கலைக் கழகத்தின் மாற்று எரிசக்தி துறை நிபுணர்கள் மூலம் பார்வையிட்டதாகவும், அவற்றில் கீழ்க்காணும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் தங்களது 09.07.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்திருந்தனர்.

1) 5 டன் காய்கறி கழிவுகளை கொட்டுவதற்கும், அரைப்பதற்கும் தகுதியான முறை ஏற்படுத்துதல்
2) அரைக்கப்பட்ட 5 டன் குப்பை கழிவுகளை (Digester) செரிமானியில் கொண்டு செல்ல ஏற்ற முறை உண்டாக்குதல்
3) சேகரிக்கப்படும் கழிவிலிருந்து பிளாஸ்டிக் மற்றும் தேவையற்ற இனங்கள் பிரிக்க உரிய முறையினை ஏற்படுத்துதல்
4) காய்கறி கழிவுகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் அமைப்பிற்கான மின் செலவினத்தை குறைத்தல்
5) (Bio Waste) உயிர் கழிவுகளை பணியாளர்கள் கையாளும் முறையினை எளிமைப்படுத்துதல்

மேற்கண்ட மாற்றங்களை தாங்களே செயல்படுத்தி ஆலையினை (Plant) இயக்கி பராமரிக்க தயார் நிலையில் உள்ளதாகவும், அதற்கான அனுமதியை வழங்கும்படியும் கேட்டுக் கொண்டதற்கிணங்க 3.8.2018 முதல் ஆறு மாத காலத்திற்கு மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.1221, நாள் 27.7.2018 ல் ஒப்புதல் பெறப்பட்டு ஷை நிறுவனத்தின் சோதனை ஓட்டடமாக மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

ஷை நிறுவனத்தினர் தங்களது 19.1.2019 ம் தேதிய கடிதத்தில் புதிய இயந்திரங்களை உபயோகப்படுத்தி இயக்குவதற்கு ஏற்ப உட்கட்டமைப்பு கூடுதல் வசதிகளை மேம்படுத்துவதற்கெனவும் மற்றும் Fuel Cell Technology முறையில் Bloom Box கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யவும், அதற்கான மாற்றங்களை செயல்படுத்தி ஆலையினை

(Plant) இயக்கி பராமரிக்கவும் கூடுதலாக ஒரு வருட காலம் சோதனை ஓட்டம் நடத்த அனுமதி கோரப்பட்டது.

திண்டுக்கல் மாநகராட்சியில் காய்கறி கழிவுகளிலிருந்து மின்சாரம் தயார் செய்யும் பணியினை மேற்கொள்ள தொழில்நுட்ப பணியாளர்களோ, மேலும் இதர பணிகளுக்கு போதிய முன் அனுபவம் வாய்ந்த துப்புரவுப் பணியாளர்களோ இல்லாத காரணத்தினாலும், திண்டிமாவனம், தொண்டு நிறுவனத்தினர் மூலம் 04.02.2019 முதல் கூடுதலாக ஒரு வருட காலத்திற்கு சோதனை ஓட்டமாக மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண். 8103/ 2011/ இ4)

**<u>அ.குறிப்பு</u>**

அனுமதி அளிக்கலாம்

---

**8)** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவுக்குச் சொந்தமான வருவாய் பிரிவு உபயோகத்தில் உள்ள வாகனம் எண். டி.என்.57.எச். 3034 க்கு 08.02.2019ம் தேதியுடன் அனுமதிக்காலம் முடிவடைவதால் 10.02.2019 முதல் 10.02.2024 வரை மேலும் 5 வருட காலத்திற்கு வாகனத்தை இயக்கவும், வருடாந்திர பராமரிப்புப் பணிக்காகவும் உத்தேச செலவினத் தொகை ரூ.75000/– ஐ பொது நிதியிலிருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.15705 / 2018 / இ3 )

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) அனுமதி வழங்கலாம்.
2) ரூ.75000/– பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்
3) அனுமதியை எதிர்நோக்கி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**9)** திண்டுக்கல் மாநகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்கு 2018–19 ம் நிதியாண்டிற்கு 19.12.2018 ம் தேதிய 8வது மாநில உயர்மட்டக் குழுக்கு கூட்டத்தில் கீழ்க்காணும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | Supply and delivery of 100 Nos. Battery Operated Vehicle ( BOV) E - Cart for Micro Composting Centres in Dindigul City Municipal Corporation | 180.00 |
| 2 | Supply and delivery of 13 Nos. of 2cum capacity Box Tipper (LCV) for Door to Door collection of Garbage in Solid waste Management at Dindigul City Municipal Corporation | 72.80 |

(ந.க.எண்: 5840 / 2016 / எச் 1)

<u>அ.குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழஙகலாம்.
2) தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் 2018–19 ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ252.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

---

**10)** திண்டுக்கல் மாநகராட்சியில் வார்டு எண்.25 முதல் 48 வரையிலான பகுதிகளில் பராமரிக்கப்பட்டு வரும் அடிகுழாய் மற்றும் மினி பவர் பம்ப் ஆகியவற்றை 2019–20 ஆம் ஆண்டில் ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்புப் பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (271 / 2013/ இ 4)

<u>அ.குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**11)** திண்டுக்கல் மாநகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2017 – 18 ன் கீழ் வார்டு எண்.27, காந்திஜி புது ரோடு சுல்தான் மணி மண்டபம் அருகில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பிடம் கட்டும் பணிக்கு 25.05.2018 அன்று இரண்டாம் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மதிப்பீட்டினை விட 2.67 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த எஸ்பிடி பில்டர்ஸ், ஒப்பந்ததாரருக்கு 20.6.2018 ல் வேலை உத்தரவு வழஙகப்பட்டது. ஷை பணியினை அவ்விடத்தில் ஆரம்பிக்கும்பொழுது அப்பகுதி பொதுமக்கள் IHHL திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளதாகவும், எனவே அப்பகுதியில் கழிப்பறை தேவையில்லை

எனவும் தெரிவித்ததன்பேரில், அப் பணிக்குப் பதிலாக வார்டு எண்.12, பெங்காளி மார்க்கெட்டில் கழிப்பிடம் கட்டும் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்: 7951 / 2014 / இ 4 )

<u>அ.குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இப் பணி திட்டப் பணி என்பதாலும், பணியினை ரத்து செய்து திரும்பவும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டும், பணியினை விரைந்து முடித்து பணிமுடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், காந்திஜி புது ரோடு சுல்தான் மணி மண்டபம் அருகில் கழிப்பிடம் கட்டும் பணிக்குப் பதிலாக வார்டு எண்.12, பெங்காளி மார்க்கெட்டில் பழுதடைந்த நிலையில் உள்ள கழிப்பிடத்தை இடித்து விட்டு புதிதாக கட்டுவதற்கும், அப் பணியினை எஸ்பிடி பில்டர்ஸ் ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விகிதத்தில் மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**12)** இம் மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19 ன் கீழ் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஜெட்ராடு இயந்திர வாகனம் வாங்கும் பணிக்கு 28.12.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | |
|---|---|
| 1) | விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்ஷர்ஸ், கோயம்புத்தூர் |
| 2) | எஸ்பி பில்டர்ஸ் |

முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்தது என இம் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கும் குழுவினரால் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 12.1.2019 காலை 11.00 மணியளவில் ஒப்பந்ததாரர்களின் விலை ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் (Comparative Statement) தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்ஷர்ஸ், கோயம்புத்தூர் | 5130300.00 | 4.70 % மதிப்பீட்டிற்கு கூடுதல் |
| 2) | எஸ்பி பில்டர்ஸ் | 5374500.00 | 9.68 % மதிப்பீட்டிற்கு கூடுதல் |

வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவின் ஒப்புதலின்படியும், பணியின் அவசர அவசியம் கருதியும், ஷை பணி திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடிக்க வேண்டியிருப்பதாலும் மதிப்பீட்டை விட 4.70 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்ஷர்ஸ், கோயம்புத்தூர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **<u>(ந.க.எண். 11411 / 2018 / இ4 )</u>**

**அலுவலக குறிப்பு**

1) ஷை பணிக்கு ரூ.49.00 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மாமன்றத் தீர்மான எண்.1102, நாள் 29.5.2018 இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

2) ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவின் ஒப்புதலின்படியும், பணியின் அவசர அவசியம் கருதியும், ஷை பணி திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடிக்க வேண்டியிருப்பதாலும் மதிப்பீட்டை விட 4.70 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்ஷர்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

3) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து ஏற்கலாம்.

---

**13)** இம் மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19 ன் கீழ் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஜெட்ராடு இயந்திர வாகனம் வாங்கும் பணிக்கு 28.12.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | |
|---|---|
| 1) | விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்ஷர்ஸ், கோயம்புத்தூர் |
| 2) | எஸ்பி பில்டர்ஸ் |

முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்தது என இம் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கும் குழுவினரால் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 12.1.2019 காலை 11.00 மணியளவில் ஒப்பந்ததாரர்களின் விலை ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் (Comparative Statement) தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்ஷர்ஸ், கோயம்புத்தூர் | 1669400.00 | 4.34 % மதிப்பீட்டிற்கு கூடுதல் |
| 2) | எஸ்பி பில்டர்ஸ் | 1748900.00 | 931 % மதிப்பீட்டிற்கு கூடுதல் |

வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவின் ஒப்புதலின்படியும், பணியின் அவசர அவசியம் கருதியும், ஷை பணி திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடிக்க வேண்டியிருப்பதாலும் மதிப்பீட்டை விட 4.34 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்ஷர்ஸ், கோயம்புத்தூர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண். 11411 / 2018 / இ4 )**

**அலுவலக குறிப்பு**

1) ஷை பணிக்கு ரூ.16.00 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மாமன்றத் தீர்மான எண்.1102, நாள் 29.5.2018 இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
2) ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவின் ஒப்புதலின்படியும், பணியின் அவசர அவசியம் கருதியும், ஷை பணி திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடிக்க வேண்டியிருப்பதாலும் மதிப்பீட்டை விட 4.34 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்ஷர்ஸ், கோயம்புத்தூர் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
3) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து ஏற்கலாம்.

---

**14)** இம் மாநகராட்சியில் பொது நிதி 2018–19 ன் கீழ் சேலம், கரூர் மற்றும் திருச்சி பேருந்துகள் நிற்கும் பகுதியில் உள்ள இரண்டு உயர்கோபுர மின் விளக்குகளை பேருந்து நிலைய நடுவில் மாற்றிடவும், மேலும் 400 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளுக்குப் பதிலாக மின்சேமிப்பு விளக்குகளான LED விளக்குகள் பொருத்தும் பணிக்கு 30.1.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1) | ஹைடெக் இன்ஜினியரிங, திண்டுக்கல் | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.10000/– மதிப்புள்ள வங்கி வரைவோலை |
| 2) | ஐடியல் எலக்ட்ரானிக்ஸ், கோயம்புத்தூர் | 6.00 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.10000/– மதிப்புள்ள வங்கி வரைவோலை |

(ந.க.எண். 10312 / 2017 / இ3)

<u>அ.குறிப்பு</u>

1) ரூ.10,00,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண். 1395, நாள் 28.12.2018 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஹைடெக் இன்ஜினியரிங, திண்டுக்கல் ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

---

**15)** திண்டுக்கல் மாநகராட்சியில் கடந்த 16.11.2018 ல் வீசிய கஜா புயல் காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ரூ.7.00 இலட்சம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 271 / 2013 / இ 4 )

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வெள்ள நிவாரண நிதி 2018–19 ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.7.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

---

**16)** திண்டுக்கல் மாநகராட்சி கோட்டைக்குளம் மற்றும் ஐயப்பன் கோவிலுக்கு நடுவில் உள்ள கோட்டைக்குளத்தின் சுற்றுச் சுவர் கடந்த **16.11.2018** ல் வீசிய கஜா புயல் காரணமாக இடிந்து விழுந்து விட்டது. இதனால் ஐயப்பன் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளதுடன், கோட்டைக் குளத்தில் உள்ள நீரினால் இடிந்து விழுந்த சுற்றுச் சுவரின் உட்புறமும் அரிப்பு ஏற்பட்டு கூடுதலாக இடிந்து விழ வாய்ப்பு உள்ளது. எனவே ஷை இடிந்து விழுந்த சுற்றுச்சுவரினை உடனடியாக கட்டப்பட வேண்டியுள்ளதால் ரூ.**6.75** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்: 271 / 2013 / இ 4 )

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பொது நிதி 2018–19 ன் கீழ் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழஙகலாம்

---

**17)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு குப்பை வாகனங்களை இயக்க போதிய ஓட்டுநர்கள் இல்லாததால் அயல் ஒப்பந்த அடிப்படையில், எஸ்.எஸ்.எஸ். மேன் பவர் ஏஜென்சி, திண்டுக்கல் மூலம் **9** ஓட்டுநர்கள் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தப் பணி காலம் **31.12.2018** உடன் முடிவடைவதால், பொது சுகாதாரப் பணிகள் தொய்வடையாது நிறைவேற்றும் பொருட்டு மேலும் **3** மாத காலத்திற்கு கால நீட்டிப்பு கொள்ளவும், மேற்படி நிறுவனத்தின் மூலமே ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தினக்கூலி ரூ.**403/–** என்ற விகிதத்திலேயே பணி மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 18751 /2015/எச்1 ).

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**18)** திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் எண்.சிசிஓ.எண்.**4/2018** எண்ணிட்ட **14.11.2018**ம் தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி , திண்டுக்கல் நாகா பிளவர் மில்ஸ் தனியார் நிறுவனம் மூலமாக இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் சேகரமாகும்

மண் மேடுகள், புழுதிகளை அகற்றி சுத்தம் செய்யும் , நவீன தொழில்நுட்பம் கொண்டு வாகனம் ஒன்று இலவசமாக சமுக பாதுகாப்பு பஙகளிப்பு நிதியின் (CSR FUND) மூலம் வாஙகி வழஙகும்படி இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.1338/2018 நாள். 28.11.2018 படி மேற்படி நிறுவனத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்கண்ட நாகா பிளவர் மில்ஸ் நிறுவனம் சமுக பாதுகாப்பு பஙகளிப்பு நிதியின் (CSR FUND) மூலம் நவீன தொழில்நுட்பம் கொண்ட வாகனம் ஒன்று இம்மாநகராட்சிக்கு இலவசமாக வாங்கி ஒப்படைப்பு செய்திட தயார் நிலையில் உள்ளது.

இம்மாநகராட்சியின் 48 வார்டுகளிலும் உள்ள சாலைகள் மற்றும் மெயின் ரோடுகளின் மொத்த நீளம் 185 கிமீ ஆகும். இச்சாலைகளில் தினசரி ஆயிரக்கணக்கான வாகனஙகள் செல்கின்றன. இதனால் சாலைகளின் இருபுறம் மற்றும் சாலையின் மைய பகுதிகளில் கழிவு மண், புழுதிமண் தேஙகி சாலை முழுவதும் அசுத்தமான நிலையில் உள்ளது. மேலும் சாலையில் இருபுறமும் மண் தேஙகுவதால் வாகன விபத்துக்கள் ஏற்படும் நிலையுள்ளது. இம்மாநகரில் தினசரி சுமார் 104 மெ.டன் திடக்கழிவுகள் சேகரமாகிறது சேகரமாகும் திடக்கழிவுகளை அப்புறப்படுத்திட 677 பணியாளர்கள் தேவையுள்ளது. ஆனால் தற்பொழுது 414 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். அவர்களைக்கொண்டு திடக்கழிவுகளை மட்டும் அப்புறப்படுத்தும் நிலை உள்ளது. சாலைகளில் உருவாகும் மண்ணை துப்புரவு பணியாளர்களைக்கொண்டு தொடர்ந்து சுத்தம் செய்ய இயலாத நிலையுள்ளது. மேலும் அனைத்து சாலைகளிலும் உள்ள கழிவு மண்ணை அப்புறப்படுத்திட 1 கி.மீட்டக்கு 1 நபர் வீதம் 185 கி.மீ க்கு 185 துப்புரவு பணியாளர்கள் கூடுதலாக தேவைப்படுகின்றார்கள். துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையால் சாலையின் இருபுறமும் சேகரமாகும் மண்ணை அகற்ற இயலாத நிலையுள்ளது. 185 துப்புரவு பணியாளர்களை தனியார் ஒப்பந்த நிறுவனஙகளிடமிருந்து பெற்று பணி மேற்கொள்ளும் பட்சத்தில் அதற்கான செலவுத்தொகை மாதம் ஒன்றுக்கு தோராயமாக ரூ.20 லட்சம் செலவாகும். மேற்கண்ட செலவினத்தை குறைப்பதோடு, மாநகராட்சிக்கு உட்பட்ட சாலைகள் அனைத்தும் மிகவும் சுத்தமாகவும், மண்மேடுகள், புழுதிமண் இன்றி பராமரிப்பு செய்திட இவ்வாகனம் மிகவும் அவசியமாக தேவைப்படுகிறது.

எனவே சாலையில் சேகரமாகும் மண்ணை சுத்தம் செய்யும் நவீன தொழில்நுட்பம் கொண்ட வாகனத்தை சமுக பாதுகாப்பு பஙகளிப்பு நிதியின் ( CSR FUND ) மூலம் தனியார் நிறுவனமான திண்டுக்கல் நாகா பிளவர் மில்ஸ் அவர்கள் மூலம் மாநகராட்சி பயன்பாட்டிற்கு வழஙகப்படவுள்ள வாகனத்தை மாநகராட்சியின் பொதுசுகாதாரப்பயன்பாட்டிற்கு பயன்படுத்திக்கொள்ளவும்,

மேற்கண்ட வாகனம் தொடர்பான சட்டப்பூர்வ ஆவணங்களை மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து பெற்று மாநகராட்சி வாகன இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து, மாநகராட்சி வாகனமாக ஆணையர் அவர்கள் பெயரில் பெயர்மாற்றம் செய்து மாநகராட்சி அசையும் சொந்தாக ( வாகனம் ) அங்கீகரிக்கவும்,

மேற்படி வாகனத்தில் தொழில்நுட்ப பராமரிப்பு மேற்கொள்ள விருப்பமுள்ள தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு சேவை அடிப்படையில் இலவசமாக பராமரிப்பு (ஓட்டுனர் ஊதியம், எரிபொருள் செலவினம், வருடாந்திர தகுதிச்சான்று, ஆயுள் காப்பீடு, சாலைவரி, பசுமைவரி மற்றும் இதர வரி இனங்கள் நீங்கலாக) செய்திட விருப்பம் கோரியதில் திண்டுக்கல் திண்டி மா வனம் தனியார் தொண்டு நிறுவனம் **18.01.2019** தேதிய ஒப்புதல் கடிதத்தில் விருப்பம் தெரிவித்துள்ளது. மேலும் வேறு நிறுவனங்களிடமிருந்து விருப்ப கடிதம் எதுவும் பெறப்படவில்லை. எனவே மேற்கண்ட வாகனத்தை திண்டுக்கல் திண்டி மா வனம் தனியார் தொண்டு நிறுவனத்திற்கு மாநகராட்சியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இலவசமாக தொழிற்நுட்ப பராமரிப்பு செய்திட ஒப்புதல் அளித்திடவும்,

மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று மற்றும் உரிமையாளர் பெயர் மாற்றம் செய்து ஆணையாளர் பெயரில் பதிவு செய்து , மாநகராட்சி வாகனமாக பெயர்மாற்றம் ஆகும் செலவினத்திற்கு ஒப்புதல் வேண்டியும் மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. திண்டுக்கல் நாகா பிளவர் மில்ஸ் அவர்களிடமிருந்து சாலைகளில் சேகரமாகும் மண் மேடுகள், புழுதிகளை அகற்றி சுத்தம் செய்யும் , நவீன தொழில்நுட்பம் கொண்டு வாகனம் ஒன்று இலவசமாக சமுக பாதுகாப்பு பஙகளிப்பு நிதியின் (CSR FUND) மூலம் வாங்கி, மாநகராட்சி பொதுசுகாதாரப்பயன்பாட்டிற்கு பயன்படுத்திக்கொள்ள ஒப்புதல் அளிக்கலாம்.
3. திண்டுக்கல் திண்டி மா வனம் தனியார் தொண்டு நிறுவனம் **18.01.2019** தேதிய ஒப்புதல் கடிதத்தில் விருப்பம் தெரிவித்தை ஏற்று, மாநகராட்சியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இலவசமாக தொழிற்நுட்ப பராமரிப்பு செய்திட ஒப்புதல் அளிக்கலாம்,
4. மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று மற்றும் உரிமையாளர் பெயர் மாற்றம் செய்து ஆணையாளர் பெயரில் பதிவு செய்து , மாநகராட்சி வாகனமாக பெயர் மாற்றம் ஆகும் செலவினத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம்

---

**19)** திண்டுக்கல் தலைமை அரசு மருத்துவமனைக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழஙக செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை அவர்களின் கடித நாள் **24.1.2019**ம் தேதிய கடிதத்தில் மேற்படி மருத்துவமனைக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழஙக ரூ. **50.00/–** இலட்சம் ECS மூலம் அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் இருந்து கோபால் சமுத்திர கரை வரையும் மற்றும் அரசு தலைமை

மருத்துவமனையிலிருந்து அரசு மருத்துவமனை ரோடு வரை மேற்படி மதிப்பீட்டிற்குள் பாதாள சாக்கடை இணைப்பு பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 15105/2018/இ4 )

**அலுவலக குறிப்பு**

ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

---

**20)** இம் மாநகராட்சியில் பொது நிதி 2018–19 ன் கீழ் காமராஜர் பேருந்து நிலையத்தில் 32 வணிக கடைகளுக்கான மின் இணைப்பிற்குரிய EB பேனல் பாக்ஸ் மற்றும் மின் மீட்டர் பாக்ஸ் மின் உதிரி பாகங்கள் பொருத்துவதற்கு தரைவழி கேபிள் மற்றும் பழுதடைந்த விளக்குகளுக்குப் பதிலாக LED விளக்குகள் பொருத்தும் பணிக்கு 30.1.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1) | ஹைடெக் இன்ஜினியரிங, திண்டுக்கல் | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.20000/– மதிப்புள்ள வஙகி வரைவோலை |
| 2) | ஐடியல் எலக்ட்ரானிக்ஸ், கோயம்புத்தூர் | 6.00 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.20000/– மதிப்புள்ள வஙகி வரைவோலை |

(ந.க.எண். 10312 / 2017 / இ3)

**அ.குறிப்பு**

1) ரூ.20,00,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண். 1396, நாள் 28.12.2018 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஹைடெக் இன்ஜினியரிங, திண்டுக்கல் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

---

**21)** இம்மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 451 துப்புரவு பணியாளர்களின் பணியிடமானது கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பாக அனுமதிக்கப்பட்டதாகும். தற்பொழுது திண்டுக்கல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, மக்கள் தொகை 2,07,000 ஆகவும், நகரில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 54,000ஆக உயர்ந்துள்ள நிலையில் அதற்கேற்றவாறு அரசு நிர்ணயித்துள்ள அளவுகோலின்படி தேவையான பணியாளர்களை பயன்படுத்தி பொது மக்களின் நலனையும் பொது சுகாதாரத்தையும் முறையாக பராமரித்து பேணிக் காப்பது மிக அவசியமும், அத்தியாவசியமும் ஆவதாகும். தற்பொழுது மாநகர பகுதிகளில் பாதாள

சாக்கடைத் திட்டப் பணி, குடிநீர் திட்ட விரிவாக்கப் பணி போன்ற பணிகளுக்காக சாலைகளை ஆங்காங்கே தோண்டி பணி மேற்கொள்ளப்படுவதால், மாநகர கழிவு நீர் கால்வாய்கள் மண் கழிவுகளால் நிறைந்து அடிக்கடி தூர்வார (DESILTING) வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. மேலும் தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக் கழிவு மேலாண்மைப் பணிகளை முழுமையாக செயல்படுத்த வேண்டிய நிலையும் உள்ளது. எனவே அரசாணை எண்.101/97ல் வழங்கப்பட்டுள்ள அளவுகோலின்படி இந்மாநகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 677. தற்போது மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர 184 மற்றும் ஒப்பந்த 226 ஆக மொத்தம் 410 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு விரிவடைந்த இம்மாநகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிகளை முழுமையாக மேற்கொள்வது இயலாமலும், மிக கடினமாகவும் உள்ளது. எனவே, மக்கள் தொகைக்கேற்ப தேவைப்படும் 226 (677–451) பணியாளர்களில் அத்தியாவசியமாக **தேவைப்படும் 50 பணியாளர்களை** இம்மாநகராட்சியில் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் எக்செல் நீட் அண்ட் டைடி நிறுவத்தால் (01.11.2018 முதல் 31.01.2019 முடிய) பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மேற்படி பணி ஒப்பந்தகாலம் 31.01.2019 முடிவடைவதாலும், சுகாதாரப் பணிகள் தொய்வின்றி நடைபெறவும், மேற்படி பணிக்கான ஒப்பந்த காலத்தினை **01.02.2019 முதல் 30.04.2019 முடிய நீட்டிப்பு செய்து** வழஙகவும், அதற்கான தோராய செலவினம் ரூ.23.00 இலட்சத்திற்கும் (ரூபாய் இருபத்தி மூன்று லட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது **(ந.க.எண்.15584/2015/எச்2).**

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசிய கருதியும், நிர்வாக நலன் கருதியும், தொடர் நடவடிக்கை மேற்கொள்வதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**22)** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்திட கருத்தடை செய்யும் பணியானது செயலாளர், விலஙகுகள் நல அமைப்பு, கோவிந்தாபுரம், திண்டுக்கல் அமைப்பிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் ஒப்படைக்கப்பட்டு, கருத்தடை செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், நிதிநிலை பற்றாக்குறை காரணமாக மேற்கண்ட விலஙகுகள் நல அமைப்பு கருத்தடைப் பணி மேற்கொள்ளாதபடியால், மேற்படி அமைப்புடன் இம்மாநகராட்சி ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விலக்கிக் கொள்ளப்பட்டது. மேற்படி பணியினை இம்மாநகராட்சி நிர்வாகமே மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்ட நிலையில், கருத்தடை செய்யும் பணி மேற்கொள்ளும் கட்டிடம்

பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்ததால் மேற்படி கருத்தடை பணிகள் மேற்கொள்வதில் கால தாமதம் ஏற்பட்டு வந்தது.

மேலும், தெரு நாய்களின் இனப்பெருக்கம் அதிகரித்து பொது மக்களுக்கு தொல்லைகள் ஏற்படுவதாக தினசரி நாளேடுகளின் மூலமாகவும் தொலைபேசி வாயிலாகவும் மாநகராட்சிக்கு புகார்கள் வந்தபடியால், பணியின் அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் நலன் கருதியும், தெருநாய்களுக்கு கருத்தடை செய்யும் பணிகளை விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில், தற்போது இம்மாநகராட்சியின் பொறியியல் பிரிவிலிருந்து மேற்படி கட்டிட பழுது பார்க்கும் பணி முடிவுற்றதாக தெரிவிக்கப்பட்ட விவரம் மற்றும் துப்புரவு ஆய்வர்களின் அறிக்கைகள் / பட்டியலின்படி நகரில் சுற்றித் திரியும் 5300 நாய்களில், இந்நிதியாண்டில் முதற்கட்டமாக 1200 நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் ரேபிஸ் வெறி நாய்கடி தடுப்பூசி போடும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/– (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) ற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.1266/2019/எச்3).**

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10,00,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழஙகலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**23)** திண்டுக்கல் மாநகராட்சியின் நகர்புற மலேரியா ஒழிப்பு திட்டம் மூலம் டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மலேரியா போன்ற தொற்றுநோய்கள் கொசுக்கள் மூலம் பரவுவதை தடுத்திட 48 குழுக்கள் அமைத்து பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. இதன் ஒருபகுதியாக கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளும் பணிக்கான டெமிபாஸ்(அபேட்) மருந்து தற்பொழுது 100 லிட்டர் மட்டுமே இருப்பு உள்ளது. டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு 3 மாத கால இருப்பு வைக்க வேண்டியுள்ளதால், முதிர்கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள தேவையான பைரித்திரம் 2% (Pyrethrum 2%) மருந்து 300 லிட்டர்-ஐ Tamilnadu Medical Supply Corporation (TNMSC)–ன் அங்கீகாரம் பெற்ற **M/s**

**Paramount Pesticides Ltd., Merrut** நிறுவனத்திடமிருந்து அரசு நிர்ணயம் விலையில் பெற்றிடவும் அதற்கு ஆகும் தோரய செலவீனம் ரூ.4,00,000/-ஐ (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது (ந.க.எண்: 1239/2015/எச்2)

**அலுவலகக் குறிப்பு**

அனுமதிக்கலாம்.

---

**24)** திண்டுக்கல் மாநகராட்சியின் நகர்புற மலேரியா ஒழிப்பு திட்டம் மூலம் டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மலேரியா போன்ற தொற்றுநோய்கள் கொசுக்கள் மூலம் பரவுவதை தடுத்திட 48 குழுக்கள் அமைத்து பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. இதன் ஒருபகுதியாக கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளும் பணிக்கான டெமிபாஸ 5% (அபேட்) மருந்து தற்பொழுது 70 லிட்டர் மட்டுமே இருப்பு உள்ளது. டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு 3 மாத கால இருப்பு வைக்க வேண்டியுள்ளதால், கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள தேவையான டெமிபாஸ5% (அபேட்) மருந்து 500 லிட்டர்-ஐ Tamilnadu Medical Supply Corporation (TNMSC)–ன் அங்கீகாரம் பெற்ற **M/s Paramount Pesticides Ltd., Merrut** நிறுவனத்திடமிருந்து அரசு நிர்ணயம் விலையில் பெற்றுக்கொள்ளவும், அதற்கு ஆகும் தோரய செலவீனம் ரூ.4,00,000/-ஐ (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1239/2015/எச்1).

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவுகளை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**25)** திண்டுக்கல் மாநகராட்சியின் நகர்புற மலேரியா ஒழிப்பு திட்டம் மூலம் டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மலேரியா போன்ற தொற்றுநோய்கள் கொசுக்கள் மூலம் பரவுவதை தடுத்திட 48 குழுக்கள் அமைத்து பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. இதன் ஒரு பகுதியாக தேங்கிய நீர் நிலைப் பகுதிகள், கால்வாய்களில் உற்பத்தியாகும் கொசுப்புழு ஒழிக்க பயன்படுத்தக்கூடிய பயோ லார்விஸைடு – Bacillus thuringiens var israelensis 5% WP stain ABIL மருந்து தற்பொழுது இருப்பு இல்லாத காரணத்தினால் பொது சுகாதாரப் பணியின்

அவசர அத்தியாவசிய தேவைக்காக 300 கிலோ பயோ லார்விஸைடு Bacillus thuringiens var israelensis 5% WP stain ABIL மருந்தை Tamilnadu MedicalSupply Corporation (TNMSC)–ன் அங்கீகாரம் பெற்ற M/S. Ajay Bio-Tech (India) Ltd., புனே என்ற நிறுவனத்திடமிருந்த அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் பெற்றிடவும் அதற்கு ஆகும் தோராய செலவின தொகை ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு லட்சம்)–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1239/2015/எச்2).**

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**26)** இம்மாநகராட்சிக்குட்பட்ட 48 வார்டுகளிலும் பொது மக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு நிலவேம்பு குடிநீர் வழஙகப்பட்டு வருகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 96 பள்ளிகள் மற்றும் 114 அஙகன்வாடி மையஙகளில் உள்ள அனைத்து மாணவ மாணவிகளுக்கும் 2019ம் ஆண்டில் 60 நாட்களுக்கு ஒருமுறை 5 சுற்றிற்கு நிலவேம்பு குடிநீர் வழஙகிட 3000 கிலோ தேவைப்படுவதால், அரசு அஙகீகாரம் பெற்ற நிறுவனமான டாம்கால், (TAMPCOL) சென்னை நிறுவனத்திடமிருந்து 3000 கிலோ நிலவேம்பு பொடி வாஙகிடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/– (ரூபாய் பத்து லட்சம் மட்டும்)ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 1815 /2015/எச்2)**

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**27)** திண்டுக்கல் மாநகராட்சியின் நகர்புற மலேரியா ஒழிப்பு திட்டம் மூலம் டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மலேரியா போன்ற தொற்றுநோய்கள் கொசுக்கள் மூலம் பரவுவதை தடுத்திட 48 குழுக்கள் அமைத்து பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் தற்பொழுது இதன் ஒரு பகுதியாக முதிர் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளும் பணிக்கான மாலத்தியான் டெக்னிக்கல் கிரேடு 95% (Malathion Technical grade 95%) மருந்து தற்பொழுது 20 லிட்டர் மட்டுமே இருப்பு உள்ளது. டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு 3மாத கால இருப்பு வைக்க வேண்டியுள்ளதால், முதிர் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள தேவையான மாலத்தியான் டெக்னிக்கல் கிரேடு 95% (Malathion Technical grade 95%) மருந்து 200 லிட்டர்-ஐ Tamilnadu Medical Supply Corporation

(TNMSC)ன் அங்கீகாரம் பெற்ற **M/s Coromandel International Ltd., Secunderabad** நிறுவனத்திடமிருந்து அரசு நிர்ணயம் விலையில் பெற்றிட ஆகும் தோராய செலவீனம் ரூ.2,00,000/-ஐ (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவுகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்: 1239/2015/எச்1)

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

அனுமதிக்கலாம்.

---

**28)** திண்டுக்கல் மாநகராட்சி வார்டு எண்.45, மேட்டுப்பட்டியில் பழைய ரேசன் கடை தெரு மற்றும் மேட்டுப்பட்டி விஸ்தரிப்பு 4வது தெருவில் வடிகால் கட்டும் பணிக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 271 / 2013 / இ 4 )

<u>**அ.குறிப்பு**</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

---

29) இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் தெருநாய்கள் இனப்பெருக்கத்தடை அறுவைசிகிச்சை மேற்கொள்ள தெருவில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து வாகனத்தில் ஏற்றி அறுவை சிகிச்சை அரங்கிற்கு கொண்டு செல்லும் பணிக்கு பயன்படுத்தக்கூடிய நாய்கள் பிடிக்கும் வாகனம் TN57 AQ 3085 கடந்த 2015-ம் ஆண்டு முதல் நாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் திண்டுக்கல் பிராணிகள் நல அமைப்பு மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. கடந்த 2015ம் ஆண்டு மேற்கண்ட வாகனம் பழுதுகள் சரிபார்த்து வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறப்பெற்று திண்டுக்கல் பிராணிகள் நல அமைப்பிடம் ஒப்படைவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது இந்நிலையில் கடந்த 2017ம் ஆண்டு முதல் நாய்கள் கருத்தடை அறுவைச் சிகிச்சை அரங்கு மராமரத்துப் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி பெற்று மராமத்து பணிகள் நடைபெற்று வருகின்றது இதன் காரணமாக நாய்கள் அறுவைசிகிச்சை செய்யும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எனவே தெருநாய்களை மேற்படி வாகனம் மூலம் பிடிக்கும் பணி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது தற்சமயம் நாய்கள் அறுவை அரங்கு புதுப்பிக்கும் பணிகள் முடியும் நிலையில் உள்ளது. மேலும்

தெருநாய்கள் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் பணியை தொடங்குவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு புதிதாக ஒப்பந்தம் எடுக்க கூடிய நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது எனவே திண்டுக்கல் பிராணிகள் நல வாரியத்தில் ஒப்படைவு செய்யப்பட்டுள்ள மேற்கண்ட வாகனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்து வாகனத்தை திரும்ப பெற்று மாநகராட்சி மூலம் பராமரிப்பு செய்திடவும், வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து வாகனத்தை இயக்குவதற்கும் ஆகும் செலவினம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு (ரூ1,00,000)க்கு ஒப்புதல் வேண்டியும், இப்பணியை அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் பணிமனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று மேற்கொள்ள அனுமதி வேண்டியும் மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகின்றது

அ.கு.

மாமன்றம் அனுமதிக்கலாம்

1. திண்டுக்கல் பிராணிகள் நல வாரியத்தில் ஒப்படைவு செய்யப்பட்டுள்ள நாய்கள் பிடிக்கும் வாகனம் **TN57 AQ 3085** வாகனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்து வாகனத்தை திரும்ப பெற்று மாநகராட்சி மூலம் பராமரிப்பு செய்திடவும்
2. வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து வாகனத்தை இயக்குவதற்கு ஆகும் செலவினம் குறித்து அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் பணிமனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவிணம் ரூபாய் ஒரு லட்சத்திற்கு **(Rs1,00,000)**த்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**30)** திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குப்பட்ட சர்வே வார்டு எண் **6** , பிளாக் எண். **66,** நகரளவு எண். **73,** திண்டுக்கல் ரவுண்ட் ரோடு பூஙகாவிற்கு மேற்கே சாலைபகுதியில் நடைமேடைக்கு தெற்கே சாலைபுறம்போக்கில் அமைந்துள்ள இடத்தில் மாற்று திறனாளிகள் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் ஆவின் பாலகம் **10‘** X **8‘** ல் அமைக்க டிடி **160** திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மேலாளர் அவர்கள் கடந்த **04.01.2019**ம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார். மேற்படி கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ROC.No.. **720/2019**/எப்**3)**

**அலுவலக குறிப்பு–**

மாற்றுத் திறனாளிகள் வாழ்வதாரம் மேம்படும் வகையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஆவின் பாலகம் அமைக்க அனுமதிக்கலாம்.

1. அரசாணை எண் 460, வருவாய் துறை நாள். 04.06.1998ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தரைவாடகையினை நிலத்தின் வழிகாட்டி மதிப்பீட்டின் அடிப்படையில் கீழ்கண்டவாறு மாத வாடகை ரூ.1000/– என்ற விகிதத்தில் வாடகை நிர்ணயம் செய்யலாம்.
2. கீழ்க்கண்ட நிபந்தனைக்களுக்குட்பட்டு ஒப்படைக்கும் நாள் முதல் ஒராண்டு காலத்திற்கு நில வாடகைக்கு அனுமதி வழஙகி ஒப்புதல் அளிக்கலாம்.
3. சர்வே வார்டு எண் 6 , பிளாக் எண். 66, நகரளவு எண். 73, திண்டுக்கல் ரவுண்ட் ரோடு பூஙகாவிற்கு மேற்கே சாலைபகுதியில் நடைமேடைக்கு தெற்கே சாலைபுறம்போக்கில் அமைந்துள்ள இடத்தில் 10' X 8' அளவில் மட்டுமே ஆவின் பாலகம் அமைக்கப்படவேண்டும்.
4. ஆவின் பாலகம் அமைக்கப்படும் பொழுது போக்குவரத்திற்கோ பொது மக்களுக்கோ எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு 10' X 8' அளவில் மட்டுமே அமைத்துக் கொள்ளலாம்.
5. மேற்படி ஆவின் பாலகத்தில் பால் மூலம் தயார் செய்யப்படும் ஆவின் பாலக பொருட்கள் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். மேலும் உள் வாடகைக்கு விடக்கூடாது. இதர பொருட்கள் விற்பனை செய்தால் அனுமதி ரத்து செய்யப்படும்.
6. மேற்படி இடம் மாநகராட்சிக்கு தேவைப்படும் பொழுது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் ஆவின் பாலக பெட்டியினை அப்புறப்படுத்தி கொள்ள வேண்டும்.
7. எந்த ஒரு காரணத்திற்காகவும் நீதி மன்றத்தில் வழக்கு தொடரக் கூடாது.
8. மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் அமைக்க ஒரு ஆண்டிற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. ஆவின் பாலகம் தொடர்ந்து நடத்த விரும்பினால் உரிமம் முடிவுறும் மூன்று மாதத்திற்கு முன்பே விண்ணப்பம் அளித்து மீண்டும் உரிமம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
9. ஆவின் பாலக கடைக்கு நில வாடகையாக மாதம் ஒன்றுக்கு ரூ. 1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) செலுத்தப்பட வேண்டும் ஒரு வடத்திற்கான வாடகை ரூ. 12 X 1000 = ரூ. 12,000/– மற்றும் காப்புத் தொகை ரூ. 10,000/– (Security deposite) முன் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும்.

---